# **JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

## **CC No.88/2017**

## **DEPOSITION OF WITNESS**
## **(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 10 |
| Name | : Tr. Karthikeyan |
| Father's Name | : Iyyamperumal |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2022.

**முதல் விசாரணை.**

நான் 03.02.2021 அன்று முதல் விசாரணை வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளேன். அன்றைய தினம் நான் வழங்கிய ஆர்பிடி எண்.3224/2000 என்ற ஆவணத்தை ஒப்பீடு செய்வதற்கு முதல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போது நான் அளிக்கும் விசாரணை.

நான் வழங்கிய 3223 மற்றும் 3224 ஆகிய இரண்டு ஆவணங்களும் பட்டா மாறுதலுக்கு உண்டான ஆவணங்கள். அவை இரண்டும் பள்ளிக்கரணை சொத்திற்கானது. சிட்லப்பாக்கம் கிராமத்திற்கானது அல்ல. அதே போல் 3326 என்பது மடிப்பாக்கம் - II கிராம சொத்திற்கானது. இந்த வழக்கில் உள்ள 1ம் எதிரி நடராஜனின் பட்டா எண்.585 சர்வே எண்.189/1 மேற்படி சர்வே எண் பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிரிக்கு கொடுக்கப்பட்ட பட்டா சர்வே எண்.189/1J என்பதாகும். ஆர்பிடி 3223 மற்றும் 3224, 3326 க்கான ஆவணத்தை நான் சரிபார்த்து உண்மை நகல் என்று சான்றொப்பம் அளித்தேன். **அந்த ஆவணங்கள் முறையே அதசாஆ 16 மற்றும் 17 ஆகும்.** (எதிரிகள் தரப்பில் மேற்படி ஆவணத்தை குவிமுச 207 யின்படி எதிரிகளுக்கு வழங்கவில்லை என்பதாலும் மேற்படி ஆவணம் சாட்சியால் கையொப்பம் செய்து வழங்கப்பட்ட உண்மை நகல் என்பதாலும் அதற்கான அசலை ஒப்பீடு செய்து பார்க்காமல் குறியீடு செய்ய ஆட்சேபனை

செய்யப்பட்டது. சாட்சியால் கையொப்பம் செய்து வழங்கப்பட்ட ஆவணம் என்பதால் இந்நீதிமன்றம் மேற்படி ஆவணத்தை ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்பட்டது. மேற்படி ஆவணத்தின் உண்மை தன்மை வழக்கின் முழு விசாரணைக்கு பிறகே முடிவு செய்யலாம் என்பதால் தற்போது குறியீடு செய்யப்பட்டது.) மேற்படி அதசாஆ 16 மற்றும் 17 ஆவணங்கள் பள்ளிக்கரணை மற்றும் மடிப்பாக்கம் - II கிராம சொத்திற்கானது. மேற்கண்ட ஆவணங்களின் அசலை ஒப்பீடு செய்து தான் நான் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.** இல்லை.

Sd. xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 செங்கல்பட்டு</u>**

**<u>சிசி எண். 88/2017</u>**

**அ.சா. - 10 திரு.கார்த்திகேயன் த/பெ ஐயம்பெருமாள் நாள்.07.07.2022**

**சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2000ம் ஆண்டில் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்திலோ,சிட்லபாக்கம் கிராம நிர்வாக அலுவலகத்திலோ என்ன நடந்தது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் அந்த காலகட்டத்தில் வட்டாட்சியர் பயிற்சிக்காக அந்த அலுவலகத்தில் 08.09.2015ல் சேர்ந்தேன். அப்போது மாவட்ட தலைமையிடத்தில் துணை வட்டாட்சியராக குமுதா என்பவர் இருந்தார். அவரை காவல் துறையினர் விசாரித்தார்களா என்பது பற்றி தெரியாது. நான் லோகநாதன் மற்றும் சாமிநாதன் ஆகிய நபர்களை நான் பார்த்ததில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற இரண்டம் மேல் முறையிடு எண். 489/2012 என்பதில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி இரண்டாம் மேல் முறையீட்டின் தீர்ப்பு பற்றியும் எனக்கு தெரியாது. நடராஜன் என்பவருக்கு அவரின் தாயார் 1433 சதுர அடி விஸ்தீரனத்தை தான செட்டில்மெண்டில் மூலம் எழுதி வைத்தார் என்று எனக்கு தெரியாது. என் முன்பு காட்டப்படும் கணினி பட்டா எண் 585ல் 1 ஏர்ஸ் விஸ்தீரனம் ( 1000 சதுர அடி) என்பது அசல் தான். **அது எதிரி தரப்பு சான்றாவணம் 1 ஆகும்.** உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் 2433 சதுரடிக்கு பட்டா போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளனரா என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி இரண்டாம் மேல் முறையீட்டில் தாம்பரம் வட்டாட்சியர் அலுவகத்திலிருந்து என்ன ஆவணங்கள் கொண்டு செல்லப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அதில் செந்தாமரைகண்ணன் கூடுதல் சாட்சியம் அளித்த விவரமும் தெரியாது. என்னை குற்றப்புலனாய்வு துறையினர் விசாரித்தார் என்று கூறியுள்ள நிலையில் இந்த வழக்க சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கில் இருந்தது என்றாலும், எந்த ஒரு ஆவணமும் தாம்பரம் வட்டாட்சியர் அலுவகத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. என்னை தவிர மற்றவர்களை விசாரித்தார்களா என்ற விவரம் ஞாபகம் இல்லை. என்னுடைய பணி காலங்களில் ஒரு ஆண்டு காலம் தான்

வட்டாட்சியராக பணிபுரிந்தேன். வட்டாட்சியர் பயிற்சி பெற்ற காலங்களில் என்னை விசாரித்து உள்ள நிலையில் எனக்கு ஆவணங்களின் முழு விரங்கஞம் தெரிய வாய்ப்பில்லை என்றாலும், அது சம்பந்தமாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வாய்பில்லை என்றால் சரியல்ல. பட்டா என்பது வட்டாட்சியரால் அதற்கான படிவத்தை மட்டும் தான் வழங்கப்படும் என்றால் சரிதான். என் முன்பு காட்டப்படும் படிவம் பட்டா கொடுப்பதற்கான உண்மையான படிவம் தான். மேற்படி படிவத்தில் ஒரு பக்கம் மட்டும் இருந்து மற்றொரு பக்கம் அச்சிடப்படாமல் இருந்தால் அதை எளிதாக அனுபவம் மிக்க வட்டாட்சியரால் கண்டுபிடிக்க முடியும் என்றால் சரிதான். என்னுடைய முதன்மை சாட்சியத்தில் பள்ளிக்கரணைக்கு உட்பட்ட பட்டாவில் மடிப்பாக்கம் சொத்து சம்பந்தமாக இருந்ததால் அதை நான் போலி என குறிப்பிட்டுள்ளேன். நான் மேற்படி ஆவணத்தை போலி என பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆவணங்களின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றாலும். போலீஸ்சார் சொல்லியதின் அடிப்படையில் பொய் சட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதசாஆ16 மற்றும் 17 ஆகியவற்றை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

<u>**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

அதசாஆ16 -னை எழுதியது யாரு என்று தெரியாது. அதன் பிறகாவது அதை எழுதி கையொப்பம் செய்த நபரை பற்றி கேட்டு அறிந்தேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அதன் பிறகு வருகை பதிவேட்டை பார்த்ததில் அவர் பெயர் இல்லை. 7 வருடம் ஆனதால் நினைவில்லை. தற்போது சாட்சி நில அளவையர் மதனகோபால் என்று கூறுகிறார். அந்த மதனகோபால் என்ற நபர் எங்கு பணியாற்றுகிறார் என்று கேட்டு அறிந்தேனா என்றால் இல்லை. என்னுடைய பணி காலத்தில் அசா16யை தயாரித்த பிரிவில் நில அளவையர் ஒருவர்இருந்து இருப்பார் என்றால் சரிதான். ஒரு ஆவணத்தை உண்மை நகலை சான்றொப்பமிடும்போது அதன் அசலை ஒப்பிடவேண்டும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் கொடுத்துள்ள அதசாஆ16 அசலை சரிபார்த்து விட்டு அந்த அசலை என்னுடைய அலுவலக பதிவு அலுவலகத்திற்கு அனுப்பி விடுவேன். நான் அந்த ஆவணத்தை பாதுகாக்கும் நபர் இல்லை என்றால், அந்த ஆவணத்தை என் கையிலேயே வைத்துயிருக்க முடியாது என்றும், பாது காவலர் அல்ல என்றும் குறிப்பிடுகிறார். பட்டா பெறுவதற்கு விண்ணப்பம்

பெறுவார் என்றால் சரிதான். அந்த விண்ணப்பத்தில் தான் பட்டா எந்த இடத்திற்கு கோரப்படுகிறது என்ற விவரம் அடைங்கிருக்கும் என்றாலும், விண்ணப்பத்தின் அடிப்படையில் தான் பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். பட்டா கோரி தாக்கல் செய்த விண்ணப்பம் கோப்புகளில் இருக்கும். மேற்படி விண்ணப்பம் என்னுடைய பார்வைக்கு வரவில்லை, அதை நான் எடுத்தும் வைக்கவில்லை. பட்டா கோரி விண்ணப்பம் செய்தவர் யார் என்ற விவரம் மனுவை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான். அதசாஆ16 மற்றும் 17யை போலீஸ்சார் கேட்டுக்கொண்டதின் பேரில் எந்த விண்ணப்பதையும், ஆவணத்தையும் பார்க்காமல் சான்றொப்பமிட்டு, அதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதசாஆ16,17 ஆவணங்கள் ஒரே காலகட்டத்தை சேர்ந்தது. அதசாஆ16,17 ஏற்பட்ட காலத்தில் இரண்டு எல்லைகளுக்கும் ஒரே நில அளவையர் ஆவார். மேற்படி அதசாஆ17ல் துணை ஆய்வாளர், நில அளவு தாம்பரம் என்ற இடத்தில் உள்ள கையொப்பம், தேதி தெளிவாக இல்லை என்றால் சரிதான். 1ம் எதிரியின் தாயார் எழுதி வைத்த செண்டில்மெண்ட் சொத்திற்கு எழுதி வைத்தவரின் பெயரில் ஏற்கனவே பட்டா உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே பட்டா உள்ள நிலையில் நில உரிமையாளர் மீண்டும் சட்டத்திற்கு விரோதமாக பட்டா கோரவும், ஏற்படுத்தவும் எவ்வித அவசியமும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் வழங்கும் பட்டா வழங்கும் விவரங்கள் அனைத்தும் எங்கள் அலுவலக ஊழியர்களால் மட்டும் எழுதிக்கொடுக்கப்படும் என்றாலும் வேறு தனி நபர்கள் எழுத முடியாது என்றாலும் சரிதான். இந்த வழக்கில் கண்டுள்ள சொத்தை 1ம் எதிரியின் தாயார் கிரையம் பெறுவதற்கு முன்பாக அது எந்த வகைப்பட்டில் இருந்தது என்று நான் பார்க்கவில்லை. அது அரசாங்கத்திற்கு சொந்தமானதா, தனியாருக்கு சொந்தமானதா என்று அறிந்துக்கொள்ளவில்லை. வழக்கு சொத்து கிராம சாலை என்று எந்த ஆவணத்திலிருந்து எந்த வருடம் தெரிந்துக்கொண்டேன் என்றால் கிராம கணக்குகளின்படி தெரிந்துக்கொண்டேன். மேற்படி கிராம கணக்கை நான் விசாரணையில் போது போலீஸ்சாரிடம் கொடுக்கவில்லை. கேட்டார்களா என்பதும் நினைவில்லை. 7 வருடம் என்பதால் நினைவில்லை. மேற்படி இடம் தனியாருக்கு சொந்தமானது என்றாலும், அந்த புல எண்ணில் பல மனை பிரிவுகள் பிரிக்கப்பட்டு அதில் ஒரு மனையின் கிரையதாரர் தான் 1ம் எதிரியின் தாயார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மனை பிரிவுகள் பிரிக்கும் போது அங்கு அமைந்திருக்கும் சாலையை பொருத்து

அரசாங்கத்திற்கு தானபத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்று விதிமுறை என்றால் சரிதான். அந்த பத்திரத்தின்படி தான் அரசாங்கம் சாலையை பொருத்து உரிமை கொண்டாட முடியும் என்றால் சரிதான். அவ்வாறு தான பத்திரம் எதுவும் நான் பார்க்கவில்லை. அந்த இடம் அரசாங்கத்திற்கு சொந்தமானது என்பதற்கு எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இது சம்பந்தமாக விசாரணை அதிகாரிகள் விசாரித்தார்களா என்பது பற்றி ஞாபகம் இல்லை. நான் போலீஸ்சார் கேட்டுக்கொண்டதின் பேரில் அவர்கள் கொடுத்த ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றாலும், அதற்கான உண்மையாக ஆவணங்களை சரிபார்க்கவில்லை என்றாலும், போலீஸ்சார் கேட்டுக்கொண்டதின் பேரில் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமான, ஆவணம் சம்பந்தமான மற்றும் சொத்து சம்பந்தமான விவரங்கள் மட்டும் கேட்டால் 7 வருடங்கள் ஆகிறது நினைவில்லை என்று பொய்யாக கூறி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை -** இல்லை.

Sd. xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No.88/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| **IN THE COURT OF** | **: JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU.** |
| Deposition of witness for | : PW- 11 |
| Name | : Tmt.R.Jayabarathy |
| Father's Name | : Radhakrishnan |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.11.2021.

**முதல் விசாரணை.**

நான் தற்போது ஆலந்தூர் சார்பு நீதிமன்றத்தில் எழுத்தராக பணிபுரிகிறேன். நான் 2016 ஆம் ஆண்டு செங்கல்பட்டு நீதித்துறை நடுவர்=1ல் தலைமை எழுத்தராக பணிபுரிந்த போது காஞ்சிபுரம் குற்ற புலனாய்வு போலீஸ்சார் வழக்கு சம்பந்தப்பட்ட கைப்பற்றிய சொத்துக்களை பொறுத்து படிவம் 95 யை 11.07.2016-ல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது என்னுடைய பார்வைக்கு வந்தது. அந்த படிவம் 95 அதசாஆ5 ஆகும். அந்த படிவத்தில் 20 ஆவணங்கள் குறிப்பிட்டுயிருந்தது. மேற்படி அனைத்து ஆவணங்களையும், படிவம் 95 யும் ஒப்பிட்டு பரிசீலனை செய்து வழக்கு சொத்து எண். 255/2016 என்று கொடுக்கப்பட்டது. மேலும் 21.07.2016 அன்று மேற்படி குற்ற புலனாய்வு போலீஸ்சார் அளித்த வேண்டுகோள் கடிதத்தின் பேரில் மேற்படி 20 ஆவணங்களில் 17 ஆவணங்களை கையெழுத்து நிபுணருக்கு, தடய அறிவியல் துறைக்கு அனுப்ப கேட்டுக்கொண்டதின் பேரில் அதை நான் 22.07.2016 அன்று அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**.

நான் போலீஸ்சார் விசாரணையின் போது வாக்குமூலத்தில் மேற்படி ஆவணங்களையும், படிவம் 95 யும் சரிபார்த்து அனுப்பியதாக போலீஸ்சார் என்னை விசாரிக்காததால் வாக்குமூலத்தில் அளிக்கவில்லை

என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் அனைத்தையும் யாரிடமிருந்து எந்த எந்த காலகட்டத்தில் கைப்பற்றப்பட்டது என்ற விவரம் குறித்தும் அதற்கான கைப்பற்றுதல் மகஜா் குறித்தும் தெரியுமா என்றால் தெரியாது.

**மறு விசாரணை.** இல்லை.

Sd. xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.